1993 ஏப்ரல் 28]

515—

ஏற்றுமதித்தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயம்.

*16571—திரு. ஏ. ரவிக்குமார் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்றுமதித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) சட்ட அட்டவணையில் இதுகாறும் 67 தொழில்கள் குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை நிர்ணயம் செய்யும் பொருட்டு சேர்க்கப்பட்டுள்ளது. அந்த அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள தொழில்களுக்கு மட்டுமே அரசு குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை நிர்ணயம் மற்றும் மறு நிர்ணயம் செய்து வருகின்றது. மேற்படி அட்டவணையில் ஏற்றுமதித் தொழில் சேர்க்கப்படவில்லை என்பதால், இத்தொழிலுக்கு குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை அரசு நிர்ணயம் செய்வதற்கு ஆவன செய்வது என்பதற்கே இடமில்லை.

(ஆ) எழாது.

முற்பகல் 10-55

திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக பெண்கள் அதிகமான அளவில் ஏற்றுமதித்தொழில்களான கார்மெண்ட்ஸ் எக்ஸ்போர்ட், ஆனியன் எக்ஸ்போர்ட், இறால் எக்ஸ்போர்ட், ஊறுகாய் மற்றும் அப்பளம் எக்ஸ்போர்ட் செய்கிற தொழில்களில் பணி செய்கிறார்கள். இந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்கிற பெண்களுக்கு மாதம் ரூபாய் 250-லிருந்து 400 வரையில் மிகவும் குறைந்த அளவில் கூலி கொடுக்கிறார்கள். ஆனால், இந்தத் தொழில்கள் மூலமாக உற்பத்தியாளர்கள் அதிகமான அளவில் வருமானம் பெறுகிறார்கள். இதைப் போக்குகிற விதத்தில் ஏழையெளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவேண்டுமென்று, சமுதாயத்தில் அவர்கள் நல்ல நிலை அடைய வேண்டுமென்று அயராது பாடு

பட்டு வரும் நம்முடைய இதய தெய்வத்தின் அரசானது அப்படிப் பட்ட பெண்களின் நிலையை உயர்த்துவதற்கு தனியாக குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்யுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவாக ஏற்றுமதித்தொழில் என்று மட்டுமே வினாவில் குறிப் பிட்டுள்ளார். தற்போது சில குறிப்பிட்ட தொழில்களைக் குறிப் பிட்டுள்ளார். அந்தத் தொழில்கள் ஏற்கெனவே அரசு அறிவித் துள்ள தொழில்களில் இருக்குமானால் அதற்காக ஏற்கெனவே குறைந்தபட்ச ஊதியங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன என் பதையும், அப்படி இல்லாத பட்சத்தில் எதிர்காலத்தில் குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தில் அந்தத் தொழில்களைச் சேர்ப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இப்படி வேலை செய்கிற பெண்களுக்குச் சரியான முறையில் ஊதியம் கிடைப்பதற்காக ஆவன செய்வதற்கு தனியாக ஒரு கமிஷனோ, அல்லது நம்முடைய இதய தெய்வம் அமைத்துள்ள பெண்கள் நல வாரியம் சார்பாகவோ மேற்படி பணியைப் பார்வையிடுவதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சே.ரகுபதி :மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு எல்லாம் ஊதியங்கள் ஒழுங்காக கொடுக் கப்படவில்லை என்பதை அந்தப் பகுதியில் இருக்கிற தொழிலாளர் நலத்துறையினுடைய துணை ஆணையாளர், உதவி ஆணையாளர் அல்லது தொழிலாளர் நல ஆய்வாளர் ஆகியவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் அவர்களுக்கு உரிய வகையில் ஊதியம் பெற்றுத்தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 516, திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.